981 மே 7]

நெருப்பூர் கிராம குடிநீர் தேக்கத் தொட்டி

*வினா எண். 899—திரு. ப. தீர்த்தராமன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னகரம் ஒன்றியத்திற்கு உட்பட்ட நெருப்பூர் கிராமத்தில் குடிநீர் தேக்க தொட்டியின் வேலை பாதியில் நிறுத்தப்பட்டதின் காரணம் என்ன?

(ஆ) அது எப்போது முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) பொன்னகரம் ஒன்றியத்திற்கு உட்பட்ட நெருப்பூர் கிராமத்தில் ஏற்படுத்தப்பட்ட குடிநீர் தேக்க தொட்டியின் வேலை பாதியில் நிறுத்தப்படவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

[முற்பகல் 9–30]

திரு. ப. தீர்த்தராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த வேலை துவக்கப்பட்டு ஏறத்தாழ 7, 8 ஆண்டுகள் ஆகியும் முடிக்கப்படாமல் இருக்கிறது. வேலை நிறுத்தப்படவில்லையென்று அமைச்சர் தகவல் கொடுக்கிறார். வேலை நிறுத்தப்படவில்லை என்று சொன்னால், தண்ணீர் சப்ளை கொடுக்கின்ற அளவு வேலை முடிக்கப்பட்டிருக்க வேண்டும். அதனால் திட்டத்தை நிறைவேற்ற வேண்டிய இன்ஜினியர் எந்தக் காரணத்தினால் வேலையை நிறுத்தியிருக்கிறார் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, நீர்த் தேக்கத் தொட்டியினுடைய வேலை எல்லாம் கடந்த 9—4—1979-லேயே முடிந்து விட்டது. ஆனால், கிணற்றிலிருந்து 2 கிலோ மீட்டர் தூரத்திலே உள்ள நீர்த் தேக்கத் தொட்டிக்குத் தண்ணீரைத் தள்ளக்கூடிய சக்தி இல்லாததால், தண்ணீரைக் கொண்டு செல்ல, பி.வி.சி. பைப் அழுத்தம் தாங்காமல் இருந்த காரணத்தால், ஜி. 3 பைப் போட வேண்டுமென்று நாம் கேட்டிருந்தோம். அந்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. சீக்கிரத்திலே முடிக்கப்படும்.

திரு. ப. தீர்த்தராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படி நல்ல திட்டங்கள் வகுக்கப்பட்டும் அவர்கள் பொறுப்பாக இல்லாத காரணத்தால், அரசுக்கு அவப் பெயர் ஏற்படுகின்ற வகையிலே, அங்கே செயல்பட்டு வருகிறார்

கள். அதே போல் பல பள்ளிக்கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டு 7, 8, ஆண்டுகள் ஆகியும் அரசிடம் ஒப்படைக்கப்படாத நிலையில் காண்ட்ராக்டர்கள் வைத்திருக்கிறார்கள். அதற்கு அதிகாரிகள் துணையாக இருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மூலக் கேள்வி நீர்த்தேக்கத் திட்டத்தைப் பற்றியது. ஆகவே, நீர்த்தேக்கத் தொட்டியைப் பொறுத்த அளவில் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படும். பள்ளிக்கூடத்தைப் பொறுத்தவரையில் என்னிடத்திலே பதில் இல்லை. ஆனாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கருத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

இராமநாதபுரத்திலுள்ள மாவட்டத் தலைமை மருத்துவ மனைக்கு ஜெனரேட்டர் வாங்கும் திட்டம்

* வினா எண். 1010— திரு. த. இராமசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரத்தில் உள்ள இராமநாதபுரம் மாவட்டத் தலைமை மருத்துவமனைக்கு 'ஜெனரேட்டர்' வாங்கும் உத்தேசம் அரசிற்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : ஆம். இராமநாதபுரம் அரசு தலைமையிட மருத்துவ மனைக்கு மின் உற்பத்தி செய்யும் இயந்திரம் (ஜெனரேட்டர்) வாங்கி நிறுவுவதற்கான ஆணை அரசால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. ஏ. ஜி. சண்முகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட மருத்துவமனையில் தினமும் பல அறுவை சிகிச்சைகள் நடைபெறுகின்றன. அப்பொழுது மின்சாரம் தடைபட்டால் ஆப்பரேஷன் நோயாளிகளுடைய நிலை என்ன என்பதை உணர்ந்து ஒவ்வொரு மாவட்டத் தலைநகரங்களில் உள்ள மருத்துவ மனைகளில் ஜெனரேட்டர்களைப் பொருத்த அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு அரசு மாவட்ட மருத்துவமனையிலும் ஜெனரேட்டர் வைக்கப்பட வேண்டுமென்று நாம் உத்தரவிட்டிருக்கிறோம். இன்னும் இரண்டு மாதங்களுக்குள்ளே எல்லாத் தலைமை மருத்துவ மனைகளிலும் ஜெனரேட்டர் இயங்கும் என்பதை இங்கே நான் உறுதியாகச் சொல்லி விடுகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்